பொது நிருவாக சுற்றறிக்கை இல: 08/97

எனது இல. 11/309 ஈ 105
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் பாராளுமன்ற
அலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு - 07
1997 பெப்புருவரி ..03... ஆந் திகதி.

எல்லா அமைச்சுக்களின்
செயலாளர்கட்கும்
திணைக்களத் தலைவர்கட்கும்.

அரச உத்தியோகத்தர்களுக்கான மேலதிக நேரப்படி
கொடுப்பனவு

"வரவு, மேலதிக நேரப்படி, மற்றும் விடுமுறை நாள் கொடுப்பனவுகள்" தொடர்பில் வெளியிடப்பட்ட 19/89 ஆம் இலக்க 1989-03-23 ஆந் திகதியிட்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் 04 ஆம் உபபிரிவு பின்வருமாறு திருத்தப்படுகிறது.

" மேலதிக நேரப்படிக் கொடுப்பனவை மாதமொன்றுக்கு ஆகக்கூடியது 20 மணித்தியலங்களுக்கு வரையறுக்க வேண்டும். அனுமதிக்கப்பட்ட பதவியணியின் கட்டாயமாக நிரப்ப வேண்டிய வெற்றிடங்கள் ஏற்பட்ட காரணத்தால் அல்லது வேறேதேனும் விசேட காரணங்களின் பேரில் அந்த உச்ச நிலையை மீறவேண்டுமாயின், அதற்காக திணைக்களத் தலைவரின் அங்கீகாரத்தின் கீழ் சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரின் அனுமதியை பெறவேண்டும்.

2. மேலதிக நேரப் படிகளை அனுமதிக்கும்போது பின்வரும் ஆலோசனைகளை கடைப்பிடித்தல் வேண்டும்.

1. நாளாந்த பொது அரசகருமங்கள் சம்பந்தப்பட்ட பணித்தொகுதிகளுக்கிடையில் சமநிலையில் பகிர்ந்தளிக்கவும் அந்த அரசகருமங்கள் பொது அலுவலக நேரங்களில் மேற்கொள்ளப்படுவது தொடர்பிலும் அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

11. பதவியணியின் வெற்றிடங்கள் நிலவியதால் ஏற்படும் அரசகருமங்களை பணித்தொகுதியுள்ள மற்றைய உத்தியோகத்தர்களுக்கிடையில் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் மட்டும நியாயமான மேலதிகநேரப் படியொன்றை அமைச்சின் செயலாளரால் அனுமதிக்க முடியும்.

111. அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் உறுப்பினர்களின் அந்தந்தப் பிரிவுகளில்/அந்தந்த கூறுகளில் மாதமொன்றில் 20 மணித்தியாலங் களுக்கு மேற்பட்ட காலங்களில் மேலதிக நேரவேலைகளில் ஈடுபடுத்த வேண்டியதும் அவ்வாறு மேலதிக நேர அரசகருமங்களில் ஈடுபடுத்த வேண்டிய காரணங்களையும் இனங்காண வேண்டும்.

1V. மேலதிக நேர அரச கருமங்களை, இயன்றளவு குறைத்துவிடுவதற்கும் இயன்ற எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மேலதிக அரசகருமங்களை எல்லா உத்தியோகத்தர்களுக்கும் சமநிலையில் புரியக்கூடியதாக பகிர்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல் மேலதிக நேரப்பணிகளை அனுமதிக்கும் உத்தி யோகத்தர்களின் பொறுப்பாகும்.

உதாரணம்: திறப்புகளுக்கு பொறுப்பான அரச பணிகளை பணித் தொகுதிகளுக்கிடையில் ரோஸ்டர் முறைப்படி பகிரலாம்.

V. மேற்குறித்த ஆலோசனைகளின் படி மாதமொன்றுக்கு 20 மணித்தியாலங் களுக்கு கூடுதலாக மேலதிகநேர சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர் களின் பட்டியலொன்றும் அதற்கான காரணங்களையும் திணைக்களத்தலை வர்கள் யாவரும் அமைச்சுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவற்றை அவ்தா னித்த பின் அமைச்சின் செயலாளர் அவற்றை அனுமதிப்பார்.

V1. மேலதிக நேர அரச பணிகள் தொடர்பில் தங்களின் விதப்புரைகள் எல்லா மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை திணைக்களத்தலைவர்களினால் மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

V11. தேசிய விழாக்கள் போன்ற விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பில் அந்த விசேட காலப்பகுதியில் செய்ய வேண்டிய மேலதிக நேர சேவைகள் பற்றிய மதிப்பீடொன்றை சமர்ப்பித்து அதற்கான கொடுப்பனவுத் தொகைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சு செயலாளரின் அனுமதியைப் பெற வேண்டும்.

இது 1997-01-01 ஆந் திகதி தொடக்கம் செய்யப்பட வேண்டும்.

பொதத் திறைசேரியின் இணக்கத்துடன் இந்தச்சுற்றறிக்கை வெளியிடப்படுகிறது.

(ஆர்.எஸ்.ஜயரட்ன)
செயலாளர்.
அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில்,
பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு.